7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஈ) பி.எஸ்.ஜி. பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.)

(உ) தியாகராஜர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர்அறிவிப்பு. 2008 ஆம் ஆண்டு பி.எஸ்.ஜி. பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2008) மற்றும் தியாகராஜர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2008) ஆகியவற்றைப் பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஓஓ) பி.எஸ்.ஜி. பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008

(ஔஔ) தியாகராஜர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2008 ஆம் ஆண்டு பி.எஸ்.ஜி. பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2008), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2008 ஆம் ஆண்டு பி.எஸ்.ஜி. பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2008)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *முனைவர் மு. தம்பிதுரை, சொல்லுங்கள். (குறுக்கீடு)*

@ 14-5-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS